<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

<u>**M.C.O.P. No.187/2021**</u>

2023-ம் ஆண்டு ஜுலை திங்கள் 06-ஆம் நாள் வியாழன்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலைவாணி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் மனுதாரர். நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் தகவல்அறிக்கை ம.சா.ஆ-1. பிரேத பரிசோதனை சான்று ம.சா.ஆ-2. என் கணவரின் இறப்பு சான்று ம.சா.ஆ-3. வாரிசு சான்று ம.சா.ஆ-4. என் கணவரின் சம்பளச்சான்று ம.சா.ஆ-5. என் கணவரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-6. என்னுடைய ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-7. என் மகளின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-8. எனது மகனின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-9. என்னுடைய பாஸ் புத்தகத்தின் முதல் பக்க நகல் ம.சா.ஆ-10. எனது மகளின் பாஸ் புத்தகத்தின் முதல் பக்க நகல் ம.சா.ஆ-11. எனது மகனின் பாஸ் புத்தகத்தின் முதல் பக்க நகல் ம.சா.ஆ-12. எனது பான்கார்டு நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-13. என் கணவரின் ஓட்டுநர் உரிம நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ-14.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் கவுள்பாளையம் அரசுப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிகிறேன். நான் ரூபாய் 68,000/- மாத சம்பளம் பெறுகிறேன். என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என் கணவருக்கு சொந்தமானது. தனிநபர் காப்பீடு கேட்டு என் கணவரின் இருசக்கர வாகன காப்பீடு நிறுவனத்திடம் மனு கொடுத்துள்ளேன். என் கணவரின் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் சேர்க்காததால் மனு தோஷத்திற்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் என் கணவர் மது அருந்தி அவர் தான் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் முழு பொறுப்பு என்றால் சரியல்ல. என் கணவரின் பணிக்கொடை நான் இன்னும் பெறவில்லை. என் கணவரின் இறப்பினால் எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாச இழப்பு மட்டும் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவ செலவிற்கான பணம் ஸ்டார் ெ ஹல்த் இன்சூரன்சிலிருந்து இன்னும் பெறப்படவில்லை. மருத்துவ செலவுகளை நான் கோர இயலாது என்றால் சரியல்ல. சம்பளப்பட்டியல் வழக்கிற்காக தயார் செய்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மாமியார் என் கணவரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரிதான். அவர் தனியாகத்தான் இருக்கிறார்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

என் கணவரின் சொந்த ஊர் மணப்பாறை அருகே தெலுங்குப்பட்டி. 3 ஆம் எதிர்மனுதாரர் என் மாமியார். என் கணவரை படிக்கவைத்தது அவரின் தாயார் தான். என் மாமனார் 2011 இல் இறந்தார். என் கணவர் இருந்தவரையிலும் அவர் என் மாமியாரை பார்த்து வருவார் என்றால் சரிதான். அவர்போகும்போது என் மாமியாரின் தேவையை பூர்த்தி செய்வார் என்றால் சரிதான். என் மாமியாரை

என்னுடன் மனுவில் சேருமாறு கேட்டேன், அவர் தனியாக பார்த்துக்கொள்வதாகச் சொன்னார். 3 ஆம் எதிர்மனுதாரருக்கும் இழப்பீடு கிடைக்கக்கூடியது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.